18th November 1963]

(b) This will depend on the clearance from the Government of India.

திரு. மீ. கலியாணசுந்தரம்: என்னூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் வைக்க உத்தேசித்திருக்கும் நிலையங்கள் தனியார் துறையிலா, அல்லது பொதுத் துறையிலா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எலக்ட்ரிசிட்டி போர்ட் தான்.

கல்பாக்கம் அணு மின்சார நிலையம்

* 242 **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் அமைக்கப்படுவதினால் அவ்வூரை சுற்றியுள்ள கிராமங்கள் காலி செய்யப்படுமா?

(இ) அப்படியானால், அக்கிராமவாசிகளுக்கு வேறு இடங்களில் குடியிருப்பு வசதி செய்துதர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) These matters will be considered at the appropriate stage of the land acquisition proceedings which have been initiated by Government in respect of lands required around Kalpakkam.

* 243 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the present stage of the proposal to locate a Nuclear Power Station near Kalpakkam in Chingleput district;

(b) whether final approval has been obtained from the Central Government; and

(c) if so, whether this scheme would be included in the Third Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Government of India announced in December 1962 that when a decision is taken to establish a third nuclear power station in the country, it is proposed to locate it at Kalpakkam. No further communication has been received from them.

(b) & (c) Do not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசாங்கம் இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால் நில ஆர்ஜிதம் செய்வதின் நோக்கம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய அரசாங்கம் இதை மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதா அல்லது நாலாவது திட்டத்தில் சேர்ப்பதா என்பதுபற்றி அவர்கள் முடிவு செய்யவில்லை. மூன்றாவது நியூக்ளியர் பவர் ஸ்டேஷன், அணு சக்தி நிலைய அமைப்பதாக இருந்தால் அது கல்பாக்கத்தில்தான் என்று சொல்லி விட்டார்கள். முன்கூட்டியே அதற்காக நடவடிக்கைகள் எடுத்து